**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, FAST TRACK COURT, ERANIEL**
**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 357/2019 P.W.7/L.W.10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. தங்கவேலு | **Taluk** | : | |
| **Father's Name** | : | த/பெ. ராஜாமணி முத்து | **Age** | : | |
| **Address** | : | | | | |
| **Phone No.** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day** **17.03.2026**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் A1 ஆஜர். A2 ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது ESI மருத்துவமனை ஆரல்வாய்மொழியில் முதுநிலை உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் நான் 27.11.2014–ம் தக்கலை அரசு மருத்துவமனையில் பணிபுரிந்த பொழுது சரல்விளையை சேர்ந்த 23 வயது மதிக்கத்தக்க ராஜேஷ் என்பவர் காயசிகிச்சைக்காக வந்தார்.

2. அவர் தன்னை 2 தெரியாத ஆண் நபர்கள் கல்லால் மணியங்குழியில் வைத்து 27.11.2014ம் தேதி நள்ளிரவு 12.30 am மணியளவில் அடித்ததாக கூறினார். அவரை நான் பரிசோதிக்கும் போது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு கீழ்கண்ட காயங்கள் இருந்தன.

**காயம் 1.** 1x1 cm அளவில் சிராய்ப்பு காயம் இடது கையின் நடுவில் இருந்தது.

**காயம் 2.** 4x2 cm அளவில் சிராய்ப்பு காயம் வலது முட்டிக்காலில் இருந்தது.

**காயம் 3.** 1x1 cm அளவில் சிராய்ப்பு காயம் வலது கால் முட்டியில் இருந்தது.

3. அவரை நான் சிகிச்சைக்காக உள்நோயாளியாக அனுமதித்தேன். அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு அவரின் வேண்டுகோளின் அடிப்படையில் 27.11.2014 தேதி விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட மேற்கண்ட 3 காயங்களும் சாதாரணகாயம்

என்று நான் சான்று கொடுத்தேன். **நான் வழங்கிய காயச்சான்று அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. அன்றைய தினமே இரவு 01.40 மணியளவில் காரவிளாகத்தை சேர்ந்த 32 வயது மதிக்கத்தக்க ஸ்டாலின் என்பவரை ராஜேஷ் என்பவர் காயசிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவர் தன்னை 2 தெரியாத ஆண் நபர்கள் கல்லால் மணியங்குழியில் வைத்து 27.11.2014ம் தேதி நள்ளிரவு 12.30 am மணியளவில் அடித்ததாக கூறினார். அவரை நான் பரிசோதிக்கும் போது அவர் சுயநினைவுடன் இருந்தார். அவருக்கு கீழ்கண்ட காயங்கள் இருந்தன.

**காயம் 1.** 10x1x1 cm அளவில் சிதைவு காயம் இடது தலைப் பகுதியில் காணப்பட்டது

**காயம் 2.** 6x1x1 cm அளவில் சிதைவு காயம் வலது கண் இமைப்பகுதியில் காணப்பட்டது

**காயம் 3.** 5x1x1 cm அளவில் சிதைவு காயம் வலது தலைப் பகுதியில் காணப்பட்டது

**காயம் 4.** 10x2 cm அளவில் சிராய்ப்பு காயம் இடது முன் தலைப் பகுதியில் காணப்பட்டது

**காயம் 5.** 10x2 cm அளவில் வீக்க காயம் வலது கண்ணிற்கு கீழே இருந்தது.

**காயம் 6.** 5x2 cm அளவில் வீக்க காயம் இடது கண்ணிற்கு கீழ்ப்பகுதியில் காணப்பட்டது

**காயம் 7.** 3x2 cm அளவில் சிராய்ப்பு காயம் இடது நெஞ்சுப் பகுதியில் காணப்பட்டது

5. அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு அவரை மேல்சிகிச்சைக்காக ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார். அவருக்கு அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டு அங்கு அவர் 01.12.2014ம் தேதி சிகிச்சையிலிருந்து விடுவிக்கப்பட்டார். மேலும் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனையில் இருந்து கொடுக்கப்பட்ட மருத்துவப் பதிவேட்டின் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட மேற்கண்ட 7 காயங்களும் சாதாரணகாயம் என்று நான் சான்று கொடுத்தேன். **நான் வழங்கிய காயச்சான்று அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** :

1. காயம் பட்ட 2 நபர்களையும் யார் அழைத்து வந்தார்கள் என்றால், ராஜேஷ் என்பவர் தானாக வந்தார். ஸ்டாலின் என்பவரை அவரது அண்ணன் ராஜேஷ் என்பவர்

அழைத்து வந்தார். போலிசார்கள் காயம் பட்ட நபர்களை சிகிச்சைக்காக அழைத்து வரவில்லை என்றால், சரிதான்.

2. இரண்டு காயம் பட்ட நபர்களும் மது அருந்தி இருந்தார்களா என்பது குறித்து நான் பரிசோதனை செய்தேனா என்றால், அவர்களின் உடம்பில் அது குறித்த அறிகுறி இல்லாத காரணத்தினால் அது குறித்து பரிசோதனை செய்யவில்லை. மேற்சொன்ன காயங்கள் இருசக்கர வாகனத்தில் சென்று நிலைதடுமாறி கீழே விழுந்தால் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால், வாய்ப்பு உள்ளது.

குறுக்கு விசாரணை – முடிக்கப்பட்டது.

**<u>மறுவிசாரணை:</u>**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.